முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு
OS.No. 30/2020
நாள் : 04.11.2025

PW3 : சிங்காரவேலன்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை : (வாதி தரப்பில் 3 ம் சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

என்னை இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு வாதி விஸ்வநாதன் அழைத்து வந்தார். நான் தாக்கல் செய்த நிரூபண பிரமாண பத்திரத்தை ஈரோட்டில் எனது அலுவலகத்தில் பக்கத்தில் உள்ள டைப் செய்யும் அலுவலகத்தில் நான் விவரங்கள் சொல்ல தயார் செய்யப்பட்டது. இந்த வழக்கின் எண் OS 30/22 ஆகும்.

இந்த வழக்கின் எண் விஸ்வநாதன் சொல்லி எனக்கு தெரியும். போனில் அவர் தகவல் சொன்னார். பிரதிவாதி கஸ்தூரி எனக்கு முன்பின் தெரியாதவர் என்றால் இல்லை அவரை தெரியும். இந்த ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக ஒரு வாரத்திற்கு முன்பு எனக்கு தெரியும் அதற்கு முன்பு எனக்கு பிரதிவாதியை தெரியாது. வாதி விஸ்வநாதனை எனக்கு அடிக்கடி அவர் பத்திரம் எழுதும் அலுவலகத்திற்கு வருவதால் நன்கு தெரியும். வாதி விஸ்வநாதனுக்கு சுமார் 4, 5 பத்திரங்கள் நான் எழுதிக் கொடுத்துள்ளேன். பதிவு செய்யப்படும் ஆவணங்கள் அடங்கிய விவரங்கள் உள்ள பதிவேடை நான் பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். மேற்படி பதிவேடு மாவட்ட பதிவாளரின் தணிக்கைக்கு உட்பட்ட ஆவணம் என்றால் சரிதான். தற்போது ஆன்லைன் பதிவு என்பதால் மேற்படி பதிவேடு பராமரிப்பது இல்லை. வா.சா.ஆ.1 சம்பந்தமான பதிவு செய்யப்பட்ட விவரங்கள் மேற்படி பதிவேட்டில் இல்லை. 2016 ஆம் ஆண்டில் ஆவணம் ஆன்லைனில் பதிவு செய்யும் முறை இல்லை என்றால் சரிதான். விதிகளின்படிஆவண பதிவின் போது ஆவண எழுத்தர் பதிவாளர் அலுவலகத்தில் உள்ளே செல்லக்கூடாது என்றால் சரிதான், ஆனால் பதிவாளர் மற்றும் கட்சிதாரர்கள் சில சந்தேகங்கள் கேட்கும்போது அவனை எழுத்தர்கள் உள்ளே செல்வதுண்டு. வா.சா.ஆ.1 ஆவணத்தை பதிவு செய்த போது நான் பதிவாளர் அலுவலகத்தில் உள்ளே சென்றேனா என்றால் சென்றேன், வாதி விஸ்வநாதன் ஆவணத்தில் திருத்தம் உள்ளது என்று சொல்லி என்னை அழைத்ததால் நான் சென்றேன்.

வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் திருத்திக் கொடுத்தேனா என்றால் இல்லை ஆவணத்தில் திருத்தம் உள்ளதாக விஸ்வநாதன் சந்தேகம் சொன்னார் ஆனால் நான் படித்துப் பார்த்த பின்பு திருத்தம் ஏதும் இல்லை அதனால் திருத்தம் செய்யவில்லை. சொத்தை வாங்கும் நபரோ, விற்கும் நபரோ என்னை அணுகி பத்திரம் தயாரித்து கொடுக்க வேண்டும் என்று கேட்டால் நான் பத்திரம் தயாரித்து கொடுப்பேன். அந்த வகையில் என்னிடம் கேட்கப்பட்டதால் நான் வா.சா.ஆ.1 ஆவணத்தை தயாரித்து பதிவதற்கு கொடுத்தேன். வா.சா.ஆ.1 முத்திரைத்தாள் வாதியால் வாங்கப்படவில்லை என்றால் நான் வாங்கினேன். முத்திரைத்தாள் யார் பேரில் வாங்கப்படுகிறதோ அந்த நபர் பதிவேட்டில் கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் சரிதான். மேற்படி முத்திரைத்தாள்

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2025.11.04 18:58:17 +0530

பதிவேட்டில் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் யாரும் செய்யவில்லை. நான் நிரூபண பிரமாண பத்திரம் தயார் செய்தபோது வா.சா.ஆ.1 ஆவணத்தை பார்த்து அதை தயார் செய்யவில்லை. நான் ஒரு நாளில் எத்தனை பத்திரம் தயார் செய்வேன் என்றால் சுமார் 1, 2 பத்திரங்கள் தயார் செய்வேன். வா.சா.ஆ.1 பத்திரம் தயார் செய்வதற்கு முன்பும் பின்பும் என்ன பத்திரங்கள் தயார் செய்தேன் என்றால் அதை என்னால் தற்போது சொல்ல முடியாது. வா.சா.ஆ.1 பத்திரம் தயார் செய்வதற்கு முன்பும் பின்பும் என்ன பத்திரங்கள் அடிப்படையில் என்ன பண பரிமாற்றம் நடைபெற்றது என்றும் என்னால் தற்போது சொல்ல இயலாது. வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தை நான் தயார் செய்த பின்பு தற்போது இன்று தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன். நான் நிரூபண பிரமாண பத்திரம் தயார் செய்தபோது கணினியில் வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தின் விவரங்களை பார்த்த பின்பு நிரூபண பிரமாண பத்திரத்தில் தேதி மற்றும் தொகையை போட்டேன். வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே பணப்பரிமாற்றம் பதிவு அலுவலகத்தில் பதிவாளர் முன்பு நடைபெறவில்லை என்றால் பதிவு அலுவலகத்தில் நடைபெற்றது ஆனால் பதிவாளர் முன்பு நடைபெறவில்லை. பதிவாளர் அலுவலகத்திற்கு 03.02.2016 தேதியில் சென்றோம். பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே வைத்து தான் வா.சா.ஆ. 1 ஒப்பந்த பத்திரத்தில் வாதி, பிரதிவாதிகள் கையொப்பம் செய்தார்கள். என் அலுவலகத்தில் வைத்து வாதி பிரதிவாதிகளுக்கு இடையே ஒப்பந்தமும் கையொப்பம் செய்யப்படவில்லை மற்றும் பண பரிமாற்றமும் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.1 ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டபோது வாதி பிரதிவாதிகள் என் அலுவலகத்தில் இருக்கவில்லை. வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தை முதல் விசாரணை நிரூபண பிரமாண பத்திரிக்கை தயார் செய்த போது தான் கணினியில் பார்த்து அதை தயார் செய்தேன். அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே பணப்பரிமாற்றம் நடைபெற கூடாது என்ற விவரம் எனக்கு தெரியும். பொதுவாக பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தான் ஒப்பந்தம் தயார் செய்ய வேண்டும் என்றாலும் சாட்சி கையொப்பம் பெற வேண்டும் என்றாலும் பணப்பரிமாற்றமும் நடத்தப்பட வேண்டும் என்றாலும் அங்ஙனம் தான் விதியில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1.ல் சாட்சிகள் எனது அலுவலகத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.1.ல் சாட்சிகள் பதிவு அலுவலகத்தில் வராண்டாவில் வைத்து கையொப்பம் செய்தார்கள். நானும் வா.சா.ஆ.1. ஆவணத்தில் வராண்டாவில் வைத்து சாட்சி கையெழுத்து செய்தேன். வாதி எனக்கு மிகவும் வேண்டப்பட்டவர் என்றால் இல்லை, ஓரளவு எனக்கு அவரை தெரியும். வாதி விஸ்வநாதன் சொன்னதன் பேரில் தான் நான் வா.சா.ஆ.1. ஆவணத்தை தயார் செய்தேனா என்றால் இல்லை, இரண்டு பேர்களும் சொன்னார்கள் அதன் அடிப்படையில் வா.சா.ஆ.1. ஆவணத்தை தயார் செய்தேன். நான் சொன்னது போல் எனது முன்னிலையில் எந்த ஒப்பந்தமும் கையொப்பம் செய்யப்படவில்லை என்றாலும்,

SAMEENA S
Digitally signed by SAMEENA S
Date: 2025.11.04 18:58:24 +0530

எந்த பண பரிமாற்றமும் நடைபெறவில்லை என்றாலும், எந்த சாட்சிகளும் என் முன்னிலையில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வாதி எனக்கு மிக வேண்டப்பட்டவர் என்பதால் வாதி சொல்லி மேற்படி ஆவணங்கள் பொய்யாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்றைக்குமே எனது அலுவலகத்தில் வரவில்லை என்றாலும், பிரதிவாதியை எனக்கு யார் என்று தெரியாது என்றாலும், நான் பிரதிவாதியை பார்த்தது கிடையாது என்று சொன்னாலும் சரியல்ல. நான் கடனுக்கு ஆதரவாக ஒப்பந்தம் எழுதும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1. கடனுக்காக எழுதப்பட்ட ஆவணமா என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். வாதி, பிரதிவாதிகளுக்கிடை யே எங்கு வைத்து கிரயம் சம்பந்தமாக பேசப்பட்டது என்றும், என்ன தொகை பேசப்பட்டது என்றும் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. மேலும் வாதி பிரதிவாதிகளுக்கு இடையே உள்ள வாய்மொழி ஒப்பந்தம் பற்றிய விவரங்களும் எனக்கு தெரியாது. வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க வா.சா.ஆ.1.ஆவணம் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2025.11.04 18:58:31 +0530

Principal District and Sessions Judge, Erode.